# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

14.09.2020 திங்கட்கிழமை


புதினம் தெரியுமோ?

அரசியலில் கீரியும் பாம்பு மாக இருந்தவர்கள் பின்னர் பாலும் பழமுமாக மாறுவது அரசியலில் சகஜம். இப்போதும் அப்படிச் சம்பவம். வட மாகாண அமைச்சராக இருந்த டெனீஸ்வரனை, அப்போது முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரன் பதவியில் இருந்து நீக்கி யிருந்தார். அப்படி தன் னைப் பதவியில் இருந்து நீக்கியது செல்லாது என டெனீஸ்வரன் வழக்குத் தொடுத்து அதில் வெற்றியும் கண்டார். மீண்டும் அவருக்கு அமைச்சுப்பதவி வழங்கும்படி நீதிமன்றம் அறிவுறுத்தியபோதும், விக்னேஸ்வரன் அதை நடைமுறைப்படுத்தவில்லை. அதற்கிடையில் மாகாண சபையின் ஆயுளும் முடிந்து கலைக்கப்பட்டு விட்டது . நீதிமன்றத் தீர்ப்பை

2

# திலீபனை நினைவேந்த தடை விதித்தது மன்று!



யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 14

யாழ்ப்பாணம் நல்லூரில் திலீபனின் நினைவேந் தலை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்ட நிலையில், எவ்வித நினைவேந்தலையும் நடத்து வதற்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் தடை விதித்தது

2

## 20ஆவது திருத்தத்துக்கு சந்திரிகா கடும் எதிர்ப்பு



கொழும்பு, செப். 14

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவு குறித்து எதிர்க்கட்சிகள் ஏற் பாடு செய்துள்ள ஆர்ப் பாட்டங்களுக்கு முன்னாள் ஜனாதி பதி சந்திரிகா

2

## தனிமைப்படுத்தலிலிருந்து ஒருவர் தப்பித்து ஓட்டம்!

### சிலாபத்தில் சம்பவம்

கொழும்பு, செப். 14

சிலாபம் அம்பகந்தவில பகுதியில் சுற் றுலா விடுதியில் முன்னெடுக்கப்ப டும் தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் என சிலா பம் பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று (அதிகாலை குறித்த நபர் அங்கி ருந்து தப்பித்துள்ளார். டுபாயில் இருந்து நாடு திருப்பிய நிலையில் அங்கு தங்க வைக்கப்பட்ட நபரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார். குறித்த நபர் நுகோ கொடை பிரதேசத்தை சேர்ந்த 60 வயது டையவர் என்று சிலாபம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-இ)

## பட்டதாரிகளுக்கான பயிற்சி அதிகாரிகளால் தொடக்கம்!

முல்லைத்தீவு, செப். 14

முல்லைத்தீவு மாவட்டத்தில் 217 பட்டதாரி பயிலு னர்களுக்கான படையினரின் முன்னாயத்த பயிற்சி நிகழ்வு இன்று மாவட்ட செயலகத்தில் தொடங்கப் பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்ட பத்தில் முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் மற்றும் 68ஆவது படைப்பிரிவி னைச் சேர்ந்த கட்டளைத் தளபதி கேணல் சமிந்த களபதி உள்ளிட்ட படை அதிகாரிகள்

2

## விக்னேஸ்வரனுக்கு எதிரான வழக்கை டெனீஸ் வாபஸ்!



யாழ்ப்பாணம், செப். 14

வடக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் சட்டத்தரணியுமான பாலசுப்பிரமணியம் டெனீஸ்வரன், முன்னாள் முதலமைச் சர் நீதியரசர் விக்கினேஸ்வரனுக்கு

2



## க.பொ.த உயர்தர வெட்டுப்புள்ளி ஒக்ரோபரில்!

கொழும்பு, செப். 14

2019 கல்விப் பொதுத் தாரதர உயர்தரப் பரீட்சையின் வெட்டுப்புள்ளிகள் எதிர்வரும் ஒக்ரோபர்

2

## தனிமைப்படுத்தலிலிருந்து 21பேர் விடுவிக்கப்பட்டனர்

முல்லைத்தீவு, செப். 14

முல்லைத்தீவு - கேப்பாபிலவு தனிமைப்படுத் தல் நிலையத்தில் இருந்து 21 பேர் வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப்ப

2

## இந்திய மீனவர்களின் அத்துமீறல்: கண்டித்து வடமராட்சியில் பேரணி

யாழ்ப்பாணம், செப். 14

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி அத்து மீறி மீன்பிடியில் ஈடுபடுவதால் தமது வாழ் வாதாரமும் பொருளாதாரமும் பாதிக்கப்படு கின்றது என்று தெரிவித்து வடமராட்சி மீனவர்கள் இன்று பேரணியொன்றை முன் னெடுத்தனர். வடமராட்சிக்கு உட்பட்ட கடற்பகுதியில் இந்திய மீனவர்களின் அத்துமீ றிய மீன்பிடி அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது. தடைசெய்யப்பட்ட முறை களைப் பயன்படுத்தியும் அவர்கள் மீன்பிடி யில் ஈடுபடுகின்றனர். இந்த நிலையிலேயே இந்த அத்துமீறல் மீன்பிடி நடவடிக்கைக ளைத் தடுக்குமாறு வலியுறுத்தி மேற்படி

2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# திலீபனை நினைவேந்த...

இன்று காலை நடந்த வழக்கு விசாரணையின்போதே குறித்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் ஊடகப் பேச்சாளரும், தேசிய அமைப்பாளருமான சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாளை ஆரம்பமாகவிக்கும் தியாக தீபம் திலிபனின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு தடைவிதிக்க வேண்டும் என்று கோரி யாழ்ப் பாணம் பொலிஸாரினால் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
குறித்த வழக்கின் பிரதிவாதிகளாக 20 பேருடைய பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. இவ்வழக்கு இன்று நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நானும், சக சட்டத்தரணி சுகாஸூம் மன்றில் முன்னிலையானோம். பொலிஸாரினால் மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தை நிராகரித்து, திலீபனின் நினைவேந்தலை நடத்த அனுமதி தரவேண்டும் என்று சமர்ப்பணத்தை நாங்கள் மன்றில் செய்திருந்தோம்.
தடைசெய்யப்பட்ட பயங்கரவாதிகளை நினைவுகூறுகின்றோம், புலிகளை புத்துருவாக்கம் செய்ய முயற்சிக்கின்றோம், கொரோனா காலத்தில் இவ்வாறான நிகழ்வுகள் நடாத்த அனுமதிக்க கூடாது என்ற சில காரணங்களை பொலிஸார் சமர்ப்பணமாக முன்வைத்தார்கள்.
அந்த விடயங்களை நாங்கள் மறுத்திருந்தோம். மேலும் கடந்த காலங்களிலும் இவ்வாறான தடையுத்தரவு கோரப்பட்ட போது, நிகழ்வினை சுமூகமாக நடத்த நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.
இதுமட்டுமல்லாமல் அமைச்சரவை ஒப்புதலுடன் திலீபனின் நினைவுதூபி சீரமைப்புக்கு நிதி ஒதுக்கப்பட்டது என்பதையும் மன்றில் சுட்டிக்காட்டியிருந்தோம். இருந்து போதும் எமது சமர்ப்பணங்கள் நிராகரிக்கப்பட்டு, பொலிஸாரினாலே கோரப்பட்டவாறு நினைவேந்தல் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இத்தடையுத்தரவு தொடர்பில் மேன்முறையீடு செய்யப்படும் என்றார். (ம20,26,22)

புதினம் தெரியுமோ

விக்னேஸ்வரன் நடைமுறைப்படுத்தாமையால், அதை நீதிமன்ற அவமதிப்பு வழக்காகப் போட்டார் விக்னேஸ்வரன். இந்த வழக்கில் பெரும்பாலும் விக்னேஸ்வரன் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்படும் நிலையே இருந்தது. ஆனால் திடீர் திருப்பமாக தான் போட்ட வழக்கை டெனீஸ்வரன் திரும்பப் பெறப் போவதாக அறிவித்துள்ளார். இதனால் விக்னேஸ்வரனுக்கு வரவிருந்த கண்டத்தில் இருந்து தப்பியிருக்கிறார். அதேவேளை, மிக இக்கட்டான நேரத்தில், தென்னிலங்கை அரசியல்வாதிகள் இந்த வழக்கை வைத்து அவரை சிறைக்கு அனுப்பத் துடிக்கும் சமயத்தில் டெனீஸ்வரன் செய்த செயலால் விக்னேஸ்வரன் பெரிதும் நெகிழ்ந்து போனாராம். அந்த நெகிழ்வின் வெளிப்பாடாக, அடுத்த மாகாண சபைத் தேர்தல் நடந்தால் அதில் தங்கள் கூட்டணி சார்பில், டெனீஸ்வரனைக் களமிறக்குவதோடு, தாங்கள் ஆட்சியமைத்தால் டெனீஸ்வரனுக்கு கட்டாயம் அமைச்சுப் பதவி ஒன்று கொடுப்பது பற்றியும் அவர் சிலாகித்துள்ளாராம். நினைத்தபடி எல்லாம் நடந்தால் நல்லதுதானே.

-பட்சி

## 20ஆவது திருத்தத்துக்கு...

பண்டாரநாயக்க குமாரதுங்க ஆதரவு தெரிவித்துள்ளார்.
தற்போது குறித்த ஆர்ப்பாட்டங்களின் எதிர்கால நடவடிக்கை தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவர்களுடன் அவர் கருத்துகளைப் பரிமாறிக்கொண்டுள்ளார் என தெரியவருகிறது.
தனது தலைமையின் கீழ் உருவான சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வந்த சந்திரிகா தற்போது எதிர்க் கட்சிகளுடன் கைகோர்த்து ராஜபக்ச அரசுக்கு எதிரான போராட்டங்களில் களமிறங்கவுள்ளார். அவர் விரைவில் பொது மேடைகளில் ஏறவுள்ளார் என்று நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (மஇ)

## பட்டதாரிகளுக்கான...

கலந்துகொண்டு பயிற்சி வகுப்புக்களை தொடங்கி வைத்தனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை கடமைக்காக இணைக்கப்பட்ட 217 பயிலுநர்கள் குறித்த பிரதேச செயலகங்களில் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள நிலையில், 5 குழுக்களாக அவர்கள் பிரிக்கப்பட்டு சுழற்சி முறையில் 5 துறைகளில் இந்தப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.
பயிற்சிகளாக தலைமைத்துவம் மற்றும் குழுச் செயற்பாடுகள் பற்றிய பயிற்சிகள், முகாமைத்துவ பயிற்சிகள், அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பான பயிற்சிகள், தனியார் நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பான பயிற்சிகள், செயற்றிட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் களப் பயிற்சிகள் ஆகிய துறைகளில் பயிற்சி வழங்கப்படுகின்றது. (ம-19)

## தனிமைப்படுத்தலிலிருந்து...

டைத்தளத்தில் கடந்த மாதம் வெளிநாடுகளில் இருந்து நாட்டிற்கு வருகை தந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்களில் கொரோனா தொற்றுக்கு உட்படாதவர்கள் கட்டம் கட்டமாக வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். இந்த நிலையில் இன்று 21 பேர் விடுவிக்கப்பட்டனர். (ம-19)

## வழக்கை மீளப்பெறும்படி...

எதிராகத் தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை திரும்பப் பெறுவதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளார். வழக்கு நாளை 15ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில், வழக்கை மீளப்பெறுமாறு டெனீஸ்வரனிடம் விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்திருந்தார். இதையடுத்தே டெனீஸ்வரன் இதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளார்.
சட்டத்தரணி டெனிஸ்வரன் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை தவறானது என்றும் அவரை மீள அமைச்சராக உள்வாங்குமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் 2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதி வழங்கிய இடைக்காலக் கட்டளையை செயற்படுத்தத் தவறிவிட்டார் என்று சட்டத்தரணி டெனிஸ்வரன் நீதிமன்ற அவமதிப்பு வழக்கொன்றை நீதியரசர் விக்கினேஸ்வரனுக்கு எதிராகத் தாக்கல் செய்திருந்தார்.
பிரதான வழக்கில் சட்டத்தரணி டெனிஸ்வரன் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை தவறானது என்று வடமாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றம் 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி தீர்ப்பளித்தது.
இடைக்காலக் கட்டளையை செயற்படுத்த நீதியரசர் விக்கினேஸ்வரன் தவறிவிட்டார் என்ற நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணைக்காக நாளை 15ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.
இந்த நிலையில் வழக்கை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு டெனீஸ்வரனிடம் பல தரப்புக்களும் கோரிக்கை விடுத்து வருகின்றன. இதற்கிடையில், நான்கு தினங்களுக்கு முன்னர் டெனிஸ்வரனை தொடர்புகொண்ட முன்னாள் முதலமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன், வழக்கை மீளப்பெறுமாறு கோரிக்கை முன்வைத்துள்ளார் என்று தெரியவருகின்றது. வடக்கு மாகாண அமைச்சராக இருந்தபோது டெனீஸ்வரன் தவறு செய்யவில்லை என்று தெரியும். புதிய அமைச்சராக திருமதி அனந்தி சசிதரனை நியமித்தமையாலேயே டெனீஸ்வரனை நீக்கவேண்டி வந்தது என்றும் இதன்போது விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.
இதையடுத்து இந்த வழக்கை மீளப்பெறுவதற்கு டெனீஸ்வரன் இணக்கம் தெரிவித்துள்ளார். (ம-ஓ5,214)

## இந்திய மீனவர்களின்...

பேரணி நடத்தப்பட்டுள்ளது.
நல்லூர் முன்றலில் இருந்து காலை 11 மணிக்கு ஆரம்பமாகிய இந்தக் கவனவீர்ப்புப் பேரணியானது, இந்தியத் தூதரகத்தைச் சென்றடைந்தது. அங்கு இந்தியத் துணைத் தூதரிடம் மனுவொன்றும் வடமராட்சி மீனவர்களால் கையளிக்கப்பட்டது.
தொடர்ந்து நீரியல் வளத்துறை அமைச்சரின் அலுவலகத்திற்குச் சென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமும் மீனவர்கள் மனு கையளித்தனர். தொடர்ந்து நீரியல் வளத்துறை திணைக்களம், மாவட்டச் செயலகம் இறுதியாக வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் ஆகியவற்றுக்குச் சென்றும் மனுக்களைக் கையளித்தனர். (ம20,26)

## க.பொ.த உயர்தர...

முதல் வாரத்தில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது. கொரோனா வைரஸ் பரவல் காரணமாகவே இந்த வெட்டுப்புள்ளிகள் வெளியிடுவது தாமதமானதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார். இதற்கான பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-இ)

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகளில் சட்டத்தரணிகளுக்கு கட்டுப்பாடுகள்!

கொழும்பு, செப். 14
உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகும் சட்டத்தரணிகள் எவரும் இன்று முதல் விசாரணை நடத்தப்படும் இடத்துக்கு கையடக்கத் தொலைபேசிகளை கொண்டு செல்ல முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
பொதுபலசேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் சாட்சியமளித்த போது, அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் மௌலவி ஒருவருக்கு காணொளி எடுக்க உலமாவின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி உதவினார் என்ற குற்றச்சாட்டை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தின் பின்னர் மௌலவியிடமும் சட்டத்தரணியிடமும் வாக்குமூலத்தை பெறுமாறு ஆணைக்குழுவின் தலைவர் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார். இந்த நிலையில் ஆணைக்குழுவின் ஐந்து ஆணையாளர்களுக்கும் சிறப்பு அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது. அத்துடன் ஆணைக்குழுவில் முன்னிலையாகும் அரச சட்டத்தரணிகளுக்கும் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

# ‘20’ குறைபாடுகளை நீக்கி புதிய வர்த்தமானி அறிவிப்பு

## எம்.பி. கெவிந்து குமாரதுங்க தெரிவிப்பு

கொழும்பு, செப்.14

20 ஆவது திருத்த சட்டவரைபில் இருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து புதிய வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படும் என ஜனாதிபதி வாக்குறுதி அளித்துள்ளார் என நாடாளுன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

20 ஆவது திருத்த சட்டவரைபு வர்த்தமானி வெளிவந்துள்ள நிலையில் அதில் மேலும் திருத்தங்களை மேற்கொள்ள



வேண்டும் என்ற கருத்துக்கள் பரவலாக தெரிவிக்கப்பட்டு வருகின்றன. எதிர்க்கட்சிகளில் இருந்து மாத்திரமல்லாது ஆளுங் கட்சி உறுப்பினர்களில் இருந்தும் அதுதொடர்பான திருத்த யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இதுதொடர்பில் ஆளுங்கட்சி கூட்டத்தொடரிலும் கலந்துரையாடப்பட்டது.

அதனால் அரசமைப்பு 20ஆவது திருத்த சட்டவரைப்பில் இருக்கும் குறைபாடுகளைத் தீர்த்துக்கொண்டு பிரேரணைகளுடன் புதிய வர்த்தமானி அறிவிப்பொன்று வெளியிடப்படும் என ஜனாதிபதி எமக்கு வாக்குறுதி அளித்துள்ளார்.

அத்துடன் இதுதொடர்பாக ஆராய குழுவொன்று அமைக்கப்படவேண்டும் எனவும் ஆளுங்கட்சி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய பிரதமரால் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, குழுவின் அறிக்கையை அடுத்த அமைச்சரவையில் சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். (ந-இ)

## 450 முதல் 1000 சீ.சீ மோட்டார் சைக்கிள் இறக்குமதிக்கு தடை

கொழும்பு, செப்.14

450 முதல் 1000 சீ.சீ இயந்திர வலுக்கொண்ட மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்வதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எனினும் இது தொடர்பாக அமைச்சரவை முடிவை எடுக்கும் முன்னர் இறக்குமதி செய்யப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என வாகன கண்காணிப்பு, பேருந்து போக்குவரத்து சேவைகள் ராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். இதனடிப்படையில் இந்த மோட்டார் சைக்கிள்களை பதிவுசெய்ய எட்டு லட்சம் ரூபா மேலதிக கட்டணம் அறவிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

## 292 இலங்கையர்கள் தாயகம் திரும்பினர்

கொழும்பு, செப்.14

ஜப்பானிலிருந்து 292 இலங்கையர்கள் இன்று அதிகாலை நாட்டை வந்தடைந்துள்ளனர்.

ஜப்பானின் நரிட்டாவிலிருந்து 292 இலங்கையர்கள் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான யுஎல்-455 என்ற விமானத்தில் இன்று அதிகாலை 3.40 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மேலும், 64 இலங்கை மற்றும் வெளிநாட்டு மாலுமிகள் இன்று அதிகாலை 5.35 மணிக்கு கட்டாரின் டோஹாவிலிருந்து கட்டார் எயார்வேஸ் விமான சேவைக்கு சொந்தமான கியூஆர்-668 என்ற விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்திற்கு வந்த அனைத்து பயணிகளும் பி.சி.ஆர் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்டனர். (ந-இ)

## ரூ.15 மில்லியன் பெறுமதியான பஸ்கள் பொலிஸாரால் மீட்பு

15 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சொகுசு மினி பஸ்கள் மற்றும் ஒரு பெரிய லேலண்ட் பஸ் என்பன அத்துருகிரிய பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இந்த பஸ்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய “லடியா” என்றழைக்கப்படும் தினமுல்லா கங்கனாம்லேஜ் நலின் சதுரங்க என்பவருக்கு சொந்தமானவை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நபர் தற்போது இந்தியாவுக்கு தப்பியோடியுள்ள நிலையில் தலைமறைவாகியுள்ளார். இந்த பஸ்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், லடியாவின் உறவினர் மற்றும் அவரது நெருங் கிய சகாக்களும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ந-இ)

## சாட்சியம் வழங்குவதற்கு முன்னிலையானார் ரிசாத்

கொழும்பு, செப்.14

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிசாத் பதியுதீன், எ.எச்.எம். ஹலீம் ஆகியோர் இன்று காலை முன்னிலையாகியுள்ளனர். இதற்கு முன்பும் இவர்கள் இருவரும் வாக்குமூலம் வழங்க ஆணைக் குழுவில் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## அதிகபட்ச தொற்றாளர்கள் உலகளவில் நேற்றுப் பதிவு



ஜெனிவா, செப்.14


நாளொன்றில் அதிகபட்ச கொரோனாத் தொற்றாளர்கள் நேற்றுப் பதிவாகியுள்ளனர் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. நேற்று மாத்திரம் உலகளவில் புதிதாக 3 இலட்சத்து 7 ஆயிரத்து 930 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவ் அமைப்பு தெரிவித்துள்ளது. செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி 3 இலட்சத்து 6 ஆயிரத்து 857 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதற்கு பின்னர் நேற்றைய நாளிலேயே இவ்வாறு அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்நிலையில் இந்தியா, அமெரிக்கா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளிலேயே நாளாந்தம் அதிகளவில் புதிய தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர் என உலக சுகாதார அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (வ-இ)

## போதை ஒழிப்பு அதிகாரிகள் 13 பேருக்கும் மறியல் நீடிப்பு

கொழும்பு, செப்.14

போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் 13 அதிகாரிகளையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்புடையோர் எனும் சந்தேகத்தின் பேரில் இவர்கள் அண்மையில் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.(வ-இ)



## கொரோனா 3214

நாட்டில் இன்று மேலும் 10 புதிய கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் இலங்கையின் மொத்த கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 3,214 ஆக உயர்வடைந்துள்ளது. கட்டாரிலிருந்து வருகைதந்த 15 பேரும், மாலைதீவிலிருந்து வருகைதந்த 2 பேரும், ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து வருகைதந்த ஒருவரும், தாய்லாந்திலிருந்து வருகைதந்த உக்ரேனிய பிரஜையொருவம் இவ்வாறு புதிய கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (நஇ)

# நகர அபிவிருத்தி அதிகார சபையால் நடுத்தர வர்க்க வீட்டுத்திட்டம்

கொழும்பு, செப்.14

நாட்டிலுள்ள இளைஞர்களின் சொந்த வீடு வாங்கும் கனவை நனவாக்கும் நோக்கில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நடுத்தர வர்க்க வீட்டுத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் எண்ணக்கருவுக்கு அமைய முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டம் மூலமாக 5000 வீடுகள் நடுத்தர வர்க்க மக்களுக்காக நிர்மாணிக்கப்படவுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

முதல் முறையாக 6.25% வருடாந்த நிவாரண வட்டிக்கு வழங்கப்படும் இந்த வீட்டிற்காக, 30 வருட கட்டணம் செலுத்தும் காலம் வழங்கப்படவுள்ளது. அத்துடன் குறைந்தபட்ச பணம் செலுத்தி இந்த வீடு ஒன்றை கொள்வனவு செய்யவும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. கொழும்பு, கண்டி, அனுராதபுரம், பேலியகொட, கொட்டாவை, பன்னிப்பிட்டிய மற்றும் மாலபே ஆகிய பிரதேசங்களில் இந்த வீட்டுத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என குறிப்பிடப்படுகின்றது. (ந-இ)



# நாட்டில் செயற்கை முட்டைகள்

### உடன் முறையிடுமாறு கோரிக்கை

கொழும்பு, செப்14

செயற்கை முட்டைகள் தொடர்பில் சமூக ஊடகங்களில் வெளியாகி வரும் தகவல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுகின்றது என பொது சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவிக்கின்றனர்.

சந்தையில் செயற்கையாக உற்பத்தி செய்யப்பட்ட பிளாஸ்டிக் முட்டைகள் தொடர்பில் தகவல்கள் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டு வருகின்றன. இவ்வாறு வெளியாகியுள்ள தகவல்கள் குறித்து கவனம் செலுத்தப்படுகிறது என வருவதாக பொதுச் சுகாதார பரிசோதகர்களின் சங்கம் அறிவித்துள்ளது.

செயற்கை முட்டைகள் என சந்தேகம் ஏற்பட்டால் அது குறித்து பொதுமக்கள் உடனடியாக அறிவிக்க வேண்டுமென பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன கொழும்பு ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

## இளம் பெண் தற்கொலை: சாரதிகளுக்கு அபராதம்

கொழும்பு, செப்.14

கடந்த 11ஆம் திகதி கட்டுகஸ்தோட்டை பாலத்தில் இருந்து இளம் பெண் ஒருவர் குதித்து தற்கொலை செய்துகொண்டுள்ளார். இதனை வீடியோ பிடித்த சாரதிகளுக்கு அபராதம் விதிக்கப்படவுள்ளது.

மேற்படி இடத்தில், வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் வகையில் வாகனங்களை நிறுத்தி அந்தப் பெண் நீரில் மூழ்கி உயிரிழப்பதை 15 சாரதிகள் உட்பட சுமார் 30 பேர் வீடியோ எடுத்துள்ளனர். குறித்த சாரதிகளுக்கு கடுமையாக எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், 2000 ரூபாய் அபராதம் விதிப்பதற்கு கட்டுகஸ்தோட்டை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ந-இ)

# இனிவரும் தேர்தல்களில் ஈரோஸ் போட்டியிடும்

தலைமன்னார், செப். 14

ஈழ ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) கட்சி இனிமேல் மாகாண சபை, பிரதேச மற்றும் நகர சபை தேர்தல்களில் போட்டியிடும் என்று கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் ஜே.யோகராஜ் குரூஸ் தெரிவித்தார்.

கட்சியின் மாவட்ட ஒன்றுகூடல் மன்னாரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதன்பின்னர் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இவ்வளவு காலமும் நாங்கள் அமைதியாக இருந்தபோதும் எதிர்காலத்தில் எமது மாவட்டத்தின் கல்வி, பொருளாதார அபிருத்திகளுக்கான கருத்துக்களைப்பெற்று இதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வோம்.

நூற்றுக் கணக்கான இந்திய இழுவைப் படகுகள் எமது கடற் பிராந்தியத்துக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டு வருவதனால் எமது மாவட்ட மீனவ சமூகம் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகிவருகின்றது.

ஆகவே இந்த விடயத்தை கடற்றொழில் நீரியல்வளத் துறை அமைச்சருடன் இணைந்து மாவட்டத்தில் செறிந்து வாழும் மீனவர்கள், விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுப்போம். என்று மேலும் தெரிவித்தார். (த-60)

## பொலிஸ் அதிகாரி விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு, செப்.14

வாகன விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்துள்ளார். இருவரும் கடமை முடித்து பயணித்துக் கொண்டிருந்தபோது நிட்டம்புவஹொர கொல்ல பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இவர்கள் பயணித்த உந்துருளி வீதியை விட்டு விலகி அருகில் நிறுத்தப்பட்டிருந்த மகிழுந்து மற்றும் ஜீப் ரக வாகனத்தில் மோதுண்டு விபத்து ஏற்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (வ-இ)

## 10 இலட்சம் மர நடுகை விரைவில் ஆரம்பம்

கொழும்பு, செப்.14

வீதிகளின் இருபுறங்களிலும் 10 இலட்சம் மரங்களை நாட்டுவதற்கான பசுமையான சுற்றாடலை உருவாக்கும் வேலைத்திட்டத்தை விரைவுபடுத்துமாறு நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதன்போது, ஒவ்வொரு மாகாணத்திற்கும் இடையில் வீதிகளின் இருபுறங்களிலும் நாட்டக்கூடிய பொருத்தமான தாவர இனங்களை அடையாளம் கண்டு அதற்கேற்ப குறித்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லுமாறும் அமைச்சர் ஜான்ஸ்டன் பெர்னாண்டோ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். (ந-இ)

# கண்டி நில அதிர்வால் பாதிப்புகள் ஏற்படலாம்

### எச்சரிக்கின்றார் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியக இயக்குநர்

கண்டி, செப்.14

அண்மைக்காலமாக கண்டியில் ஏற்படும் நில அதிர்வினால் பாரிய பாதிப்புகள் ஏற்படலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

கண்டி, திகன உட்பட அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பல முறை ஏற்பட்ட நில அதிர்வு, மனித செயற்பாட்டினால் உருவானது அல்ல, அதனை சாதாரணமாக நினைக்க முடியாதென புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியக இயக்குநர் பொறியியலாளர் சஜ்ஜன டி சில்வா தெரிவித்துள்ளார்.

கண்டி பிரதேசத்திற்கு அருகில் பலமுறை ஏற்பட்ட நில அதிர்வுகளை சாதாரணமாக விடமுடியாது. சிறிய நில அதிர்வாக பதிவாகினாலும் கடந்த 2ஆம் திகதி இடம்பெற்ற நில அதிர்வு கண்டி பல்லேகலை நில அதிர்வு அளவீட்டில் தெளிவாக பதிவாகியுள்ளது. அத்துடன் மஹகனதார ஓய மற்றும் ஹக்மன நில அதிர்வு அளவீட்டில் சிறிதளவில் பதிவாகியுள்ளது.

இந்த நில அதிர்வு நிலைமை சுண்ணாம்புக் கல் அகழ்வினால் ஏற்படுவதாக கூறப்பட்டது. இருந்த போதிலும், அதனை உறுதியாகக் கூற முடியாது என தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் உடனடியாக விசாரணை மேற்கொள்ளவுள்ளோம் எனத் தெரிவித்த அவர், விக்டோரியா நீர்த்தேக்கத்திற்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் அப்பாதிப்பு குறித்து நினைத்துக் கூட பார்க்க முடியாது.

இது தொடர்பில் தொடர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-இ)

# புலிகளுடன் போரிடப் போகிறோம்; முஸ்லிம் தீவிரவாதிகள் பிரசாரம்

## விசாரணைகளில் அம்பலம்

கொழும்பு, செப்.14

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர்புரியப் போகிறோம் எனத் தெரிவித்து முஸ்லிம் தீவிர வாத அமைப்புகள் 20082009 வரையான காலப் பகுதியில் ஆயுதமேந்தி போராடுவதற்கான தீவிரவாத பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதி காவல்துறைமா அதிபர் எடிசன் குணதிலக தெரிவித்துள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஆரா யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று சாட்சி யமளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கடந்த 20082009 வரையான காலப்பகுதியில் காணப்பட்ட 18 தீவிரவாத குழுக்களில் சஹரா னும் இருந்தார் என அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)

# சட்டவிரோத கசிப்பு போத்தல்கள் மீட்பு

புத்தளம், செப்.14

புத்தளம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு அடங்கிய 20 போத்தல்களை பொலி ஸார் கைப்பற்றியுள்ளனர்.

புத்தளம் மாவட்டம் ஆராச்சிக்கட்டு பிரதேசசபையின் முன்னாள் தலைவ ரான ஜகத் சமந்தகேயின் வீட்டுக்கு பின்புறம் மறைத்து வைக்கப்பட்டிருந்த கசிப்பு போத்தல்களையே இவ்வாறு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என சிலாபம் பிராந்திய மோசடி தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

ஆனைவிழுந்தான் பறவைகள் சரணால யத்தின் ஒரு பகுதியை அழித்த சம்பவம் தொடர்பில் இவரை கைதுசெய்ய பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்ற நிலையில் அவர் அந்த பிரதே சத்தில் இருந்து தப்பிச் சென்று தலைம றைவாகியுள்ளார்.

இவரை தேடுவதற்காக பொலிஸார் சுற்றி வளைப்பு நடவடிக்கையை மேற்கொண்ட போதே அவரது வீட்டுக்கு பின்புறமாக இருந்து இந்தக் கசிப்பு போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன. இவர் ராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற-இ)

# முச்சக்கரவண்டி விபத்து: ஏழு பேர் வைத்தியசாலையில்

நுவரெலியா ஹற்றன் வீதியில் பத்தனை சந்தியிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் நேற்று மாலை முச்சக்கரவண்டி மோதி விபத்துக்குள்ளானதில் பாடசாலை மாணவர் கள் மூவர் உட்பட ஏழு பேர் காயமடைந்துள் ளனர்.

முச்சக்கரவண்டியில் பயணித்த மூவரும், பஸ் தரிப்பிடத்தில் பஸ்ஸுக்காக காத்திருந்த நால்வருமே காயமடைந்த நிலையில் சிகிச்சைகளுக்காக கொட்டகலை வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அக்கரபத்தனையிலிருந்து கொட்டகலை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கர வண்டியொன்றே வேகக்கட்டுப்பாட்டை இழந்து, பஸ் தரிப்பிடத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தால் பஸ்தரிப்பிடத்துக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது, திம்புள்ள பத்தனை பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-இ)

# ரஷ்ய பல்கலைக்கழகங்கள் தவறுதலாகவே நீக்கம்

## மருத்துவ சபையின் தலைவர் விளக்கம்

கொழும்பு, செப்.14

மருத்துவ சபையின் இணையத்தளத்திலுள்ள அங்கீக ரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டியலில் இருந்து ரஷ்யாவில் உள்ள உலகத் தரம் வாய்ந்த பல்கலைக்கழ கங்கள் 3 தவறுதலாகவே நீக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இலங்கை மருத்துவ சபையின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் தனியார் ஊடகம் ஒன்றுக்கு பதிலளிக்கை யிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது,

மருத்துவ சபையின் இணையத்தளத்திலுள்ள அங்கீக ரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டியலில் நீக்கம் செய்வதாயின் குழுவொன்றே தீர்மானிக்க வேண்டும். பின்னர் அந்த தீர்மானம் மீண்டும் அங்கீகரிக்கப்பட்டு பேரவைக் கூட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண் டும், அதன் பின்னரே அமைச்சருக்கு அனுப்பப்பட வேண்டும். இறுதி தீர்மானத்தை அமைச்சரே எடுக்க வேண்டும். ஆனால் 3 ரஷ்ய பல்கலைக்கழகங்கள் நீக்கப்பட்ட சம்பவத்தில் இந்த செயற்பாடு இடம்பெ றவில்லை. இதனை நீக்கினால் போதுமானது என தவறு தலாக ஒருவர் நினைத்து இணையத்தளத்தில் இருந்து பெயர்கள் நீக்கியுள்ளார். இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

# கம்பித் திருடர்கள் அறுவர் கைது

கொழும்பு, செப்.14

தொலைபேசி இணைப்புகள் வழங்கும் கம்பிகளை திருடிய 6 பேரை பியகம பிரதேசத்தில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் செப்பு கம்பி பெறும் நோக்கில் தொலைபேசி நிறுவனத்தால் நிலத்தடியில் போடப்பட்டுள்ள தொலைபேசி கம்பிகளை வெட்டி திருடிச் சென்றுள்ளனர் தெரிவிக்கப்ப டுகிறது. இரவு நேரங்களில் இவர்கள் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளதோடு, திருடப்பட்ட கம்பிக ளின் மதிப்பு சுமார் 6 இலட்சத்துக்கும் அதிகம் எனவும் பொலிஸார் தெரிவித் தனர். (வ-இ)

# மழைக்கு சாத்தியம்

கொழும்பு, செப்.14

இலங்கையில் மேல், சப்ரகமுவ மாகா ணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் 50 மில்லி மீற்றர் வரை மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மத்திய மற்றும் வடமேல் மாகாணங்க ளிலும் இடைக்கிடையே மழை பெய் யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித் துள்ளது.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், திருகோணமலை, ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெ லியா மாவட்டங்களிலும் மணித்தியா லத்துக்கு 50 கிலோமீற்றர் வரை காற்று வீசக்கூடும் எனவும் எதிர்வுகூறப் பட்டுள்ளது.

இதேவேளை, புத்தளம் மற்றும் மன் னார் ஊடாக காங்கேசன்துறை வரை யான கடற்பிராந்தியங்கள் மற்றும் ஹம்பாந்தோட்டை முதல் பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்கள் போன் றவற்றில் இடைக்கிடையே கடல் கொந்தளிப்பாக காணப்படும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது. (ற-இ)

# அதிரடிப்படையினர் சோதனை: இந்திக்கவின் சகாக்கள் கைது

கொழும்பு, செப்.14

நவகமுவ , நுகேகொட மற்றும் திஸ்ஸமஹாராம ஆகிய பகுதிக ளில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் முன்னெடுக்கப் பட்ட சோதனை நடவடிக்கைக ளின் போது மூவர் கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவரும் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப் பட்டுள்ள கெவுமா என்றழைக் கப்படும் கெழும் இந்திக்க என்பவரின் சகாக்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவகமுவ பகுதியில் கைதுசெய் யப்பட்ட நபர் பொலநறுவை பகுதியிலிருந்து மிக சூட்சுமமான முறையில் சட்டவிரோத துப்பாக்கி மற்றும் கைக்குண்டுகளை கொழும்புக்கு எடுத்து வந்து கொழும்பு மற்றும் தெற்கு பகுதிகளில் உள்ள பாதாளக் குழுக்களுக்கு பெற்றுக்கொடுப் பதற்காக உதவியவர் எனவும், இவரிடமிருந்து மடிக்கணணி மற்றும் மூன்று தொலைபேசிக கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இந்நிலையில் மேற்படி நபரால் எடுத்துவரப்பட்ட துப்பாக்கிகளை பாதுகாத்தமை மற்றும் அவற்றை ஹோமாகம பகுதி அமைந்துள்ள வீடொன்றில் மறைத்து வைத்தி ருந்தமை தொடர்பிலே மற்றைய இரு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான மூவரையும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேல திக விசாரணைகளுக்காக குற்றப் புல னாய்வு திணைக்க ளத்தில் ஒப்படைத்துள்ளனர். (ந-இ)

# விண்வெளியோடத்தை இன்று இலங்கையர் காணலாம்

கொழும்பு, செப்.14

சர்வதேச விண்வெளியோடத்தை இலங்கை மக்கள் இன்றைய தினம் வெறும் கண்களால் அவதானிக்க முடியும் என்று இத்தாலிய விண்வெளி வீரர் இக்னாசியோ மேக்னானி டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். மேகங்கள் அல்லாத சந்தர்ப்பத்தில் இன்று மாலை 6:44 மணிக்கு சர்வதேச விண்வெளி யோடத்தை வெற்றுக்கண்ணால் எல்லா இடங்களிலும் பார்க்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார். சர்வதேச விண்வெளியோடத்தில் பணிபுரியும் விண்வெளி வீரர்கள் ஒவ்வொரு நாளும் 16 சூரிய உதயங்களையும் சூரிய அஸ்தமனங்களையும் காணுகின்றனர். ஈசா கொலம்பஸ் ஆய்வகத்துடன் கூடிய சர்வதேச விண்வெளியோடம் ஈர்ப்பு விசையை மீறும் வேகத்தில் 400 கி.மீ உயரத்தில் பறக்கிறது. அதாவது மணிக்கு 28 ஆயிரத்து 800 கி.மீ வேகம் இதுவாகும். அது பூமியை முழுமையாக சுற்றுவதற்கு 90 நிமிடங்கள் மாத்திரமே எடுக்கிறது. (வ-இ)

# கலையரசனை சந்தித்தார் கனடா உயர்ஸ்தானிகர்

அம்பாறை, செப்.14



தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான த. கலையரசனுக்கும் இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கின்னனுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. இச் சந்திப்பானது அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பகுதியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இன்று இடம்பெற்றது. அம்பாறை மாவட்டத்தில் எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் அபிவிருத்தி திட்டங்கள் அரசியல் நிலமைகள் தொடர்பாக இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது. சந்திப்பின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், அம்பாறை மாவட்டத்துக்கு தேசியபட்டியல் ஆசனம் வழங்கியமைக்கு உயர்ஸ்தானிகர் கூட்டமைக்கு நன்றி தெரிவித்தார். எதிர்காலத்தில் இம்மாவட்டத்தில் இடம்பெற உள்ள நிலைமைகளை அறிந்து நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறியுள்ளார். அவர்களுடன் இணைந்து எமது மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு எமக்கு கடப்பாடு உள்ளது. நம்பிக்கை தரக்கூடிய சந்திப்பாக இச்சந்திப்பு இருந்தது எனவும் தெரிவித்தார். (வ-இ)

# வீதி ஒழுங்கு சட்டத்தால் போக்குவரத்து நெரிசல்

கொழும்பு, செப்.14

இன்று முதல் வீதி ஒழுங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக கொழும்புக்கு அருகே உள்ள பிரதான வீதிகளில் வாகனப் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற சுற்றுவட்டம் தொடக்கம் கொடா வீதி மற்றும் டி.எஸ்.சேனாநாயக்க சந்தி வரையிலும், தெஹிவளை மற்றும் கொஹுவளையிலிருந்து காலி வீதிக்கு பிரவேசிக்கும் பகுதிகளிலும் இவ்வாறு வாகனப் போக்குவரத்து நெரிசல் காணப்படுவதாக பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

அதேபோன்று பேலியகொடை மற்றும் களனி பாலத்துக்கு அருகிலுள்ள கொழும்புகண்டி வீதியிலும், நுகேகொடையிலிருந்து ஹைலெவல் வீதியிலும் கடும் போக்குவரத்து நெரிசல் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ற-இ)

# 12 ரக துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, செப்.14

புலத்கொஹுபிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரக்காஹேன பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது 12 ரக துப்பாக்கி மற்றும் 12 ரக தோட்டா என்பவற்றுடன் சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சீதாவக்கபுர குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போதே இந்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வரக்காஹேன பகுதியைச் சேர்ந்த 64 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (ற-இ)

# ஐந்து ஏக்கருக்கும் அதிகமான வனப்பகுதி அழிப்பு

கொழும்பு, செப்.14

சுற்றாடல் சட்டங்களை மீறி நக்கல்ஸ் வனப்பகுதியின் பன்வில மேல் பகுதியில் ஐந்து ஏக்கருக்கும் அதிகமான வனப்பகுதி அழிக்கப்பட்டுள்ளது என நேற்று தெரியவந்துள்ளது.

மரக்கறி செய்கைக்காக இந்த வனப்பகுதி அழிக்கப்பட்டுள்ளதாக வனப்பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இதுவொரு தனியார் காணி என்று காட்டை அழித்தவர்கள் தெரிவித்ததாக வனபாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர். சரணாலயத்துக்குள் தனியார் காணிகள் தொடர்பான தகவல்கள் இருந்தாலும், இந்தக் காணி தொடர்பில் எவ்வித தகவல்களும் இல்லை என்று வன பாதுகாப்பு திணைக்களத்தின் பிரதேசத்துக்கு பொறுப்பான அதிகாரிகள் தெரிவித்தனர். (ற-இ)

# சுற்றுலாத்துறையை மேம்படுத்த மட்டக்களப்பில் வேலைத்திட்டம்

மட்டக்களப்பு, செப்.14

மட்டக்களப்பு மாவட்டத்தை உல்லாசப் பயணிகளின் சுற்றுலா மையமாக மாற்றியமைப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் பூர்த்தியடைந்த நிலையில், சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.கெட்டியாராச்சி நேற்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு வருகைதந்ததுடன், மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா தலைமையில் கலந்துரையாடலும் நடைபெற்றது.

இதன்போது மட்டக்களப்பில் அமைந்துள்ள ஒல்லாந்தர் கோட்டையை சுற்றுலாமையமாக மாற்றியமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டது. தொல்லியல் திணைக்களத்துக்கு சொந்தமாக உள்ளதால் இதனை ஒரு வருமானம் ஈட்டக்கூடிய இடமாகவும், இருக்கின்ற பழைமையை மாறாமல் கவர்ச்சி மிக்கதாக்கிக் கொண்டு முன்னெடுப்பதற்கு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. (ற-இ)

# கைதிகளால் கைவிடப்பட்டது உணவு தவிர்ப்புப் போராட்டம்

கொழும்பு, செப்.14

பூஸா சிறைச்சாலையில் கைதிகளால் முன்னெடுக்கப்பட்ட உணவு தவிர்ப்புப் போராட்டத்தை 45 கைதிகளும் கைவிட்டுள்ளனர். இன்று முற்பகல் இந்த கைதிகள் தமது போராட்டத்தை கைவிட்டு உணவினைப் பெற்றுக் கொண்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார். பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பூஸா சிறைச்சாலையில் 45 கைதிகள் கடந்த 05 நாள்களுக்கு முன்னர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கஞ்சிபான் இம்ரான், வெலே சுதா, தெமட்டகொட சமிந்த, கொஸ்கொட தாரக மற்றும் பொடி லெசி உள்ளிட்ட பெரிய குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய கைதிகளும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-இ)

# பாகிஸ்தான் பருவமழை: இதுவரை 300பேர் சாவு

இஸ்லாமாபாத், செப்.14



பாகிஸ்தானில் கடந்த ஜூன் மாத இறுதியிலிருந்து பெய்து வரும் பருவ மழையால் ஏற்பட்ட இயற்கை பேரிடர்களில் சிக்கி 300க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் தேசிய பேரிடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

பருவமழையால் ஏற்பட்ட வெள்ளம் உள்ளிட்ட பேரிடரில் சிக்கி இதுவரை 135 ஆண்கள், 107 குழந்தைகள், 70 பெண்கள் உள்பட 310 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் அதிகபட்சமாக சிந்து மாகாணத்தில் 136 பேர் உயிரிழந்துள்ளனர். பருவ மழை பாதிப்பில் சிக்கி 142 பெண்கள், 41 குழந்தைகள், 6 ஆண்கள் உள்பட 239 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். வெள்ளத்தில் சிக்கி 78 ஆயிரத்து 521 வீடுகள் முற்றிலுமாக இடிந்து தரைமட்டமாகியுள்ளன. மேலும் 1 லட்சத்து 39 ஆயிரத்து 102 வீடுகள் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# அமெரிக்க காட்டுத் தீ: சாவு 33ஆக அதிகரிப்பு

வொஷிங்டன், செப்.14

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீக்கு பலியாகியோர் எண்ணிக்கை 33 ஆக உயர்வடைந்துள்ளது.

அமெரிக்காவின் மேற்கு கடற்கரையோரத்தில் அமைந்துள்ள கலிபோர்னியா மாநிலத்தில் ஆரம்பமான காட்டுத்தீ தற்போது ஓர்கன், வொஷிங்டன் மாநிலத்திலும் அதிக பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. காட்டுத்தீயால் கலிபோர்னியாவில் 30 லட்சம் ஹெக்டேயருக்கும் அதிக நிலப்பரப்பு, 4ஆயிரத்துக்கும் அதிகமான கட்டிடங்கள் தீயில் கருகியுள்ளன.

ஓரிகன் மாநிலத்தில் 10லட்சம் ஹெக்டேயருக்கும் அதிகமான நிலப்பரப்பு தீக்கிரையாகியுள்ளதுடன் 40 ஆயிரம் மக்கள் வீடுகளை இழந்து நிர்க்கதியாகியுள்ளனர். (வ-இ)



# இஸ்ரேல் பிரதமருக்கு எதிராக வலுப்பெறும் போராட்டங்கள்

ஜெருசலேம், செப்.14

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகூவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் ஜெரூசலேமில் வலுப்பெற்றுள்ளன. ஊழல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய பிரதமர் தலைமையிலான அரசாங்கம் பதவி விலக வேண்டுமென ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் கொரோனாத் தொற்றுப் பரவலை தடுக்கும் வேலைத்திட்டங்களிலும் இஸ்ரேல் அரசு தோல்வியடைந்துள்ளது என மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். எதிர்ப்பு பேரணி ஜெரூசலேமிலுள்ள பிரதமரின் உத்தியோகப்பூர்வ இல்லத்துக்கு அருகில் இடம்பெற்றது என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. இதன்போது பிரதமருக்கு எதிராக ஆர்ப்பாட்டக்காரர்கள் கூச்சலிட்டதுடன், எதிர்ப்பு பதாகைகளையும் ஏந்தியிருந்தனர் எனத் தெரியவந்துள்ளது.

சிறிய ஆர்ப்பாட்டமாக ஆரம்பமான எதிர்ப்பு நடவடிக்கை தற்போது இஸ்ரேல் முழுவதும் வியாபித்துள்ளது. சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றுள்ளனர். (வஇ)



# கொரோனா வைரஸ் வுஹான் ஆய்வகத்தில் தயாரிக்கப்பட்டது

**சீன வைத்தியர் திடுக்கிடும் தகவல்**

கொரோனா வைரஸ் வூஹான் ஆய்வகத்தில் தயாரிக்கப்பட்டது என சீன வைராலஜிஸ்ட் மருத்துவர் லிமெங் யான் (Dr. LiMeng Yan) திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளார்.

சீனாவின் வூஹானில் இருந்து பரவத் தொடங்கிய கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி, கோடிக்கணக்கான மக்களை பாதித்துள்ளது. பல லட்சம் பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தனர். இந்த வைரஸ், சீனாவில் உள்ள ஆய்வகத்தில் செயற்கை முறையில் உருவாக்கப்பட்டது எனவும், வேண்டுமென்றே சீனா பரவவிட்டதாகவும் அமெரிக்கா தொடர்ந்து குற்றம்சாட்டி வந்தது. அதற்கு சீனா தரப்பில் மறுப்பும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், சீனாவைச் சேர்ந்த வைராலஜிஸ்ட்டான மருத்துவர் லிமெங் யான் (LiMeng Yan), கொரோனா வைரஸ், வுஹான் ஆய்வகத்தில் தயாரிக்கப்படுகிறது எனவும் கூறியுள்ளார்.

இது தொடர்பான ஆராய்ச்சியை மேற்கொண்ட அவர் கூறியதாவது: கொரோனா வைரஸ் வுஹான் ஆய்வகத்தில் தயாரிக்கப்பட்டது என்பதற்கு விஞ்ஞான ஆதாரம் என்னிடம் இருக்கிறது. கொரோனா பதிவாகிய போது உலக சுகாதார அமைப்பிலிருந்து எந்த பதிலும் இல்லை. உலகம் எதிர்கொள்ளவிருக்கும் ஆபத்தை அறிந்திருந்தாலும் சீன அதிகாரிகள் எனது எச்சரிக்கைகளை புறக்கணித்தனர். இந்த வைரஸ் இயற்கையிலிருந்து வந்ததல்ல. உள்ளூர் மருத்துவர்கள் மற்றும் சில விஞ்ஞானிகள் மூலமாக இது தயாரிக்கப்பட்டது என்பதை நான் அறிந்திருக்கிறேன்.

இந்த ஆபத்து குறித்து உலகிற்கு தெரியப்படுத்த முயற்சிக்கையில், சீன அதிகாரிகள் என்னை அச்சுறுத்தினர். இதன் காரணமாக நான் சீனாவை விட்டு அமெரிக்கா வர வேண்டியிருந்தது. என்னைப் பற்றி வதந்திகளை பரப்புவதற்கும், எனது அனைத்து தகவல்களையும் நீக்குவதற்கும் சீன அதிகாரிகளை நியமித்துள்ளது -என்றார்.

# ஓடிடியில் வெளியாகிறது ஐஸ்வர்யா ராஜேஷின் ‘க/பெ ரணசிங்கம்’



விஜய் சேதுபதி, ஐஸ்வர்யா ராஜேஷ் நடிப்பில் உருவாகியுள்ள ‘க/பெ ரணசிங்கம்’ ஓடிடி தளத்தில் வெளியாக உள்ளது. ஐஸ்வர்யா ராஜேஷ் பிரதான கதாபாத்திரத்தில் நடித்துள்ள இந்தப் படத்தில் விஜய் சேதுபதி கௌரவக் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படத்தை பெ.விருமாண்டி இயக்கியுள்ளார்.

இந்தப் படத்தில் ‘பூ’ ராம், ரங்கராஜ் பாண்டே, வேல.ராமமூர்த்தி, பவானி ஸ்ரீ உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஜிப்ரான் இசையமைத்துள்ளார். தற்போது, ‘க/பெ. ரணசிங்கம்’ திரைப்படம் ஓடிடி தளத்தில் வெளியாவது உறுதியாகி யுள்ளது.



# பட்டம் வென்றார் டொமினிக் தீம்

நியூயோர்க்,செப்.14

அமெரிக்காவில் இடம்பெற்று வரும் பகிரங்க ரென்னிஸ் தொடரின் இறுதி ஆட்டத்தில், ஆஸ்திரியாவைச் சேர்ந்த டொமினிக் தீம் தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றுள்ளார்.

அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸ் போட்டியில், ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் ஆஸ்திரியாவைச் சேர்ந்த டொமினிக் தீம், ஜேர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரேவுடன் மோதினார். முதல் செட்டை 6:2 என்ற கணக்கில் ஸ்வெரேவ் எளிதில் கைப்பற்றினார். இரண்டாவது செட்டையும் 6:4 எனக் கைப்பற்றி அசத்தினார்.

மூன்றாவது செட்டில் டொமினிக் தீம் ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தி, 3 ஆவது செட்டை 6:4 என்ற கணக்கில் கைப்பற்றினார். தொடர்ந்து 4 ஆவது செட்டையும் 6:3 என்ற கணக்கில் கைப்பற்றினார்.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் 5 ஆவது செட்டிலும், தீம் ஆக்ரோஷமாக ஆடினார். இதனால் அந்த செட்டையும் 7:6 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தினார். இறுதியில், 2:6, 4:6, 6:4, 6:3, 7:6 என்ற செட் கணக்கில் ஸ்வெரேவை வீழ்த்தி, டொமினிக் தீம் சம்பியன் பட்டம் வென்றார். (ற)

## 2 ஆவது ஒருநாள் கிரிக்கெட் தொடரில்

# ஆஸ்திரேலியாவை வீழ்த்தி இங்கிலாந்து வெற்றி

லண்டன், செப்.14

இங்கிலாந்து-ஆஸ்திரேலியா இடையிலான 2 ஆவது ஒருநாள் கிரிகெட் போட்டியில் இங்கிலாந்து அணி 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.



முதல் ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணியை 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில், ஆஸ்திரேலியா அணி வீழ்த்தியது.

இந்த நிலையில், இங்கிலாந்து ஆஸ்திரேலியா இடையிலான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி மான்செஸ்டரில் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

இதையடுத்து களமிறங்கிய இங்கிலாந்து அணியில், எந்த வீரரும் நிலைத்து நின்று ஆடவில்லை. சீரான இடைவெளியில் இலக்குகள் வீழ்ந்தன. ஜோ ரூட் 39 ஓட்டங்கள், மோர்கன் 42 ஓட்டங்கள், டாம் கரன் 37 ஓட்டங்கள் மற்றும் அடில் ரஷீத் 35 ஓட்டங்களும் எடுத்தனர்.

இறுதியில், இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில், 9 இலக்குகளுக்கு 231 ஓட்டங்கள் எடுத்தது.

ஆஸ்திரேலியா சார்பில், சம்பா 3 இலக்குகள், ஸ்டார்க் 2 இலக்குகள் வீழ்த்தினர்.

அதைத்தொடர்ந்து 232 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆஸ்திரேலியா அணி விளையாடியது. தொடக்க ஆட்டக்காரர் ஆரோன் பிஞ்ச் பொறுப்புடன் ஆடி அரைச் சதமடித்தார். அவர் 73 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அரைச் சதமடிப்பார் என்று எதிர் பார்க்கப்பட்ட லாபஸ் சாக்னே 48 ஓட்டங்களுடன் வெளியேறினார். அலெக்ஸ் கேரி 36 ஓட்டங்கள் சேர்த்தார். மற்றவர்கள் விரைவில் வெளியேறினர்.

இறுதியில் ஆஸ்திரேலிய அணி 207 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது.

இதையடுத்து 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி, ஒருநாள் தொடரை 1:1 என்ற கணக்கில் சமன் செய்தது.(ற)

# பிரதேச சம்பியனானது நவசக்தி மகளிர் அணி

கரணவாய், செப்.14

கரவெட்டி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான கால்ப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில், இமையாணன் மத்திய மகளிர் அணியை வீழ்த்தி, நவசக்தி மகளிர் அணி பிரதேச சம்பியனானது. இந்த இறுதியாட்டம் நேற்று நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகமும், கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழகமும் பலப்பரீட்சை நடத்தின. மிகவும் விறு விறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் கோல் எதனையும் பதிவு செய்யவில்லை. இதனையடுத்து வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்கு வழங்கப்பட்ட சமனிலைத் தவிர்ப்பு உதையில் நவசக்தி மகளிர் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (ற-108)





# ஹாமில்டன் சம்பியன்

லண்டன், செப்.14

பார்முலா 1 கார்பந்தயத்தின் துஸ்கான் கிராண்ட் பிரீ இறுதிப் போட்டியில் லீவிஸ் ஹாமில்டன் வெற்றி பெற்றார். இது அவரின் 90 ஆவது கிராண்ட் பிரீ வெற்றியாகும்.

இதன் இறுதிப் போட்டி நேற்று நடைபெற்றது. முதன் முறையாக நடத்தப்படும் இந்தப் போட்டியில் இங்கிலாந்து வீரரும், மெர்சிடெஸ் அணியைச் சேர்ந்தவருமான ஹாமில்டன் வெற்றிபெற்றார்.

ஹாமில்டன் பந்தய தூரத்தை 2:19:35.060 மணி நேரத்தில் கடந்து முதல் இடம் பிடித்தார். மற்றொரு மெர்சிடெஸ் வீரர் வோல்டரி போட்டாஸ் 4.8880 வினாடிகளில் பின் தங்கி 2 ஆவது இடம் பிடித்தார். ரெட் புல் அணியின் ஆல்பன் 8.064 வினாடிகளில் பின்தங்கி 3 ஆவது இடம் பிடித்தார். (ற)

## கால்பந்து போட்டி:

# கலைமதி, இமையாணன் கழகங்கள் இறுதி ஆட்டத்துக்கு தகுதி

கரணவாய் செப் 14

கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகமும், இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகமும் இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றன.

இந்தச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன.

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில், நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும், வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

பரபரப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பலத்த போராட்டத்தின் பின், கலைமதி விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற அரை யிறுதி யாட்டத்தில் இமையாணன் மத்திய அணியை எதிர்த்து, கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி மோதியது. இதில் இமையாணன் மத்திய அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதி யாட்டத்துக்கு தகுதிபெற்றது.(ற-108,422)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 14.09.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.